


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 28-08-2024


# அடிமைகள் என்று அழைத்தது ஏன்?

**பா.ஜ.க.வின் அடிமையாக, கொத்தடிமையாக அ.தி.மு.க. இருக்கிறது என்று சொன்ன போதெல்லாம், அதை மகா யோக்கியரைப் போல மறுத்த பழனிசாமி, இப்போது அவரது வாயால் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.**

"மாநிலங்களவையில் பல மசோதாக்களை நிறைவேற்றத் தேவை இருக்கும் போது, அ.தி.மு.க. நல்ல கட்சியாகத் தெரிந்தது. கூட்டணி முறிந்த பிறகு கெட்ட கட்சியாகத் தெரிகிறதா?' - என்று மாலை மாலையாகக் கண்ணீர் வடித்திருக்கிறார் பழனிசாமி. பா.ஜ.க. சொல்வதற்கு எல்லாம் பழனிசாமி தலையாட்டிக் கொண்டிருக்கிறார் என்பதால்தான், 'பா.ஜ.க. வின் பாதம் தாங்கி பழனிசாமி' என்கிறோம். ஆமாம்! நான் பாதம் தாங்கிதான் என்பதை அவரே இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்.

சிறுபான்மை சமூகத்துக்கும் இலங்கைத் தமிழர்க்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மாநிலங்களவையில் ஆதரித்த கட்சிதான் அ.தி.மு.க..

**மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் அ.தி.மு.க. எம்.பி.க்கள். எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சந்திரசேகரன், முகமது ஜான், முத்துக்கருப்பன், நவநீதகிருஷ்ணன், சசிகலா புஷ்பா, செல்வராஜ், வைத்திலிங்கம், விஜயகுமார், விஜிலா சத்தியானந்த் ஆகிய 10 அ.தி.மு.க. எம்.பி.க்கள் அன்று ஆதரித்து வாக்களித்தார்கள். இவர்களோடு 'பாட்டாளி' அன்புமணி ராமதாசும் வாக்களித்து துரோகம் இழைத்தார். இவர்களால் தான் சிறுபான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது.அதாவது ஆதரித்தவர்கள் 125 பேர். எதிர்த்து வாக்களித்தவர்கள் 105 பேர். அன்புமணி மற்றும் அந்த 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமை சட்டம் நிறைவேறக் காரணம்.**

அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால் எதிர்த்தவர்கள் 116 பேர் என்றும் ஆதரித்தவர்கள் 114 பேர் என்றும் வந்திருக்கும். குடியுரிமைச் சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். 116 க்கும் 114 என்ற கணக்கில் CAA சட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்த பித்தலாட்டத்தைச் செய்த பழனிசாமிதான், 'நல்ல கட்சியாக அன்று தெரிந்தோமா?' என்கிறார். இதுதானே கொத்தடிமைத் தனத்துக்கான சாட்சி?

'குடியுரிமைச் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையே? எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்?" என்று கேட்டாரே பழனிசாமி.

சட்டமன்றத்தில் 2021 பிப்ரவரி 20 ஆம் தேதி, குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக பெரிய வகுப்பு எடுத்தாரே பழனிசாமி? அவரை வகுப்பெடுக்கச் சொன்னதா பா.ஜ.க.?

2021 செப்டம்பர் 8 அன்று, 'நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்' என்று சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த தனித் தீர்மானத்தை சட்டமன்றத்துக்குள் இருந்து அ.தி.மு.க. ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானத்தை எதிர்த்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை. வேறு ஒரு காரணத்தைச் சொல்லி முன்னதாகவே வெளிநடப்பு நாடகத்தை நடத்தி வெளியேறி விட்டார்கள். வெளியேறச் சொன்னதா பா.ஜ.க.? அவர்தான் கூட்டணியில் இல்லையே? உள்ளே இருந்து குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கலாமே? ஏன் செய்யவில்லை?

**மூன்று வேளாண் சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வந்தபோது பச்சைத் துண்டு போட்டுக்கொண்டு ஆதரித்தாரே பழனிசாமி? பா.ஜ.க. கூட்டணியில் அமைச்சரவையில் இடம்பெற்ற அகாலி தளம் கட்சியின் அமைச்சரே பதவி விலகுகிறார். ஆனால் பழனிசாமி ஆதரித்தார். 'அது மிக நல்ல சட்டம், அது பற்றி நான் விவாதிக்கத் தயார், என்னிடம் விவாதிக்க வாருங்கள்' என்று நிருபர்களையே சவாலுக்கு அழைத்தாரே பழனிசாமி. மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக போராடும் எட்டு மாநில விவசாயிகளை, 'அவர்கள் விவசாயிகள் அல்ல, புரோக்கர்கள்' என்று சொன்ன புரோக்கர் தானே பழனிசாமி?**

'நீட் தேர்வு வைத்தால் எழுதித்தான் ஆக வேண்டும். அதில் எந்த சந்தேகமும் இல்லை' என்று சொன்னவர்தான் பழனிசாமி. நீட் விலக்கு மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஒப்புக்கு அனுப்பி விட்டு, அதை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியதைக் கூட ஒன்றரை ஆண்டுகள் வெளியில் சொல்லாமல் வைத்திருந்தது கொத்தடிமைத்தனம் அல்லவா?

முதலமைச்சர் பதவியில் இருந்து இறக்கப்பட்ட பிறகும், 'நீட் தேர்வில் இருந்து விலக்கு எல்லாம் கிடையாது. எல்லாரும் எழுதித்தான் ஆக வேண்டும். உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்துவிட்டது. அதன்படிதான் நடத்துகிறோம். அனைத்து மாநிலத்தவரும் எழுதித்தான் ஆகவேண்டும்" என்று இவர்தான் தேர்வு முகமையைப் போல பேசினார் பழனிசாமி.

'நானும் ஒரு விவசாயி' என்று சொல்லிக் கொண்டே மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தாரே பழனிசாமி. அது கொத்தடிமைத் தனத்தின் வெளிப்பாடு அல்லவா? 'அது மிக நல்ல சட்டம், அது பற்றி நான் விவாதிக்கத் தயார், என்னிடம் விவாதிக்க வாருங்கள்' என்று நிருபர்களையே சவாலுக்கு அழைத்தாரே பழனிசாமி. அது கொத்தடிமைத் தனத்தின் உச்சம் அல்லவா?

**நீட் தேர்வா எழுதித்தான் ஆக வேண்டும் என்றும், எந்த இசுலாமியர் குடியுரிமை பறிக்கப்பட்டது என்றும், எந்த விவசாயி பாதிக்கப்பட்டார் என்றும் இவரே 'சந்திரமுகியாக' மாறியதைப் போல - பா.ஜ.க.வாக மாறிக் காட்சி அளித்தது தான் அவரது கடந்த காலங்கள் ஆகும்.**

'அப்போது நாங்கள் நல்ல கட்சி, இப்போது கெட்ட கட்சியா?' என்று கேட்பது கூட, பா.ஜ.க.விடம் கழிவிரக்கம் தேடுவதே ஆகும். அவரிடம் கொத்தடிமைத் தனத்தின் எச்சங்கள் ஒட்டிக் கிடக்கின்றன. 'என்னை ஏன் ஒதுக்குகிறீர்கள்?' என்று இன்னமும் கெஞ்சிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. வெட்கமாக இல்லையா?

**இப்போதும் பழனிசாமிக்கும் அண்ணாமலைக்கும் தான் பிரச்சினை. பழனிசாமிக்கும் பா.ஜ.க.வுக்கும் அல்ல.**



வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் நடந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் முரசொலி செல்வம், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன், கவிப்பேரரசு வைரமுத்து, கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பல்கலைக் கழக துணைவேந்தர் ஜி.வி.செல்வம், முன்னாள் அமைச்சர் தமிழரசி, மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் வேந்தர் கோ.விசுவநாதன் தலைமையில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் துரைமுருகன் - முரசொலி செல்வம் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

*வேலூர், ஆக 28-*

வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் தமிழியக்கம் - வி.ஐ.டி. பல்கலைகழகம்- பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் மன்றம் இணைந்து நடத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவுவிழா நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு வி.ஐ.டி. பல்கலைக் கழக நிறுவனர் - வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை தாங்கினார்.

சங்கர் விஸ்வநாதன், சேகர் விஸ்வநாதன், கோ.வி.செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழியக்கம் சார்பில் அமைப்பு செயலாளர் கு.வணங்காமுடி அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாநில செயலாளர் மு.சுகுமார் நோக்க உரையாற்றினார். தமிழியக்க பொதுச் செயலாளர் கவியருவி அப்துல் காதர் அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, முரசொலி செல்வம் ஆகியோர் நெகிழ்வுரை ஆற்றினார்கள். கவியரசு வைரமுத்து விழா பேருரை நிகழ்த்தினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, தமிழியக்க பொருளாளர் வே.பதுமனார், செயலாளர் முனைவர் மோகன் குமார், வி.ஐ.டி. பல்கலைக்கழக உதவி பேராசிரியர் முனைவர் மரிய ஜெபஸ்தியான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் வேலூர் மாவட்ட தமிழியக்க செயலாளர் ஜெயகர் நன்றி கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, வேலூர் – வி.ஐ.டி. கல்லூரி வளாகத்தில், பல்கலையின் வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கோவை சுப்பு ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர் வரலாற்று புகைப்படக் கண்காட்சியை முரசொலி செல்வம் அவர்கள் பார்வையிட்டார். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### 100 ஆண்டுகள் கடந்த கும்பகோணம் வாணி விலாச சபாவில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. ஏற்பாட்டில்!

*தஞ்சாவூர், ஆக. 28 -*

கும்பகோணத்தில் உள்ள நூறு ஆண்டுகள் கடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வாணி விலாச சபாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது.

வாணி விலாசா சபாவின் செயலாளரும் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி. ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் படைப்பாற்றலை போற்றும் விதத்தில், இக்கால இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் உணர்ச்சிகரமான கலைஞருடைய மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் துணை மேயர் சுப.தமிழழகன், கும்பகோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர், தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவருமான எஸ்.கே.முத்துச்செல்வம், வலங்கைமான் ஒன்றியச் செயலாளர் க.அன்பரசன், சபாவின் நிர்வாகிகள் கே.கே.எஸ்.ராஜா, சோழா மகேந்திரன், வீரபாண்டியன், சதக்கத்துல்லா, பாலு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் க. செந்தில்குமார், அரசு வழக்கறிஞர் பா.விஜயகுமார், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குத் தேர்வு செய்து தருமாறு, கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில், **'என் உயிரினும் மேலான..!'** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். ஆகஸ்ட் 17, 18, 24, 25 ஆகிய தேதிகளில் 36 மாவட்டங்களில் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. எஞ்சியுள்ள திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் புதுச்சேரி மாநிலத்திற்குமான பேச்சுப் போட்டி மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில், கீழ்க்காணும் நாட்களில் நடைபெறவிருக்கிறது, அதன் விவரம் வருமாறு :

**29-08-2024, வியாழக்கிழமை**

| வ. எண் | மாவட்டம், மாநிலம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | மேலிடப் பார்வையாளர் (மாநில துணைச் செயலாளர்) |
|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ஹோட்டல் பீமாஸ் வைஸ்ராய், பாரதி நகர், ராமேஸ்வரம் பிரதான சாலை, இராமநாதபுரம்-3 | முனைவர் சபாபதிமோகன், அமுதரசன், மருத்துவர் யாழினி<br>வே.மதிமாறன், உமா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ஜி.பி.ராஜா |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 25–08–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி